1981 ஏப்ரல் 14]

விஸ்தரிக்க, பல் வைத்தியப் பிரிவு, எக்ஸ்–ரே பிரிவு போன்ற பிரிவுகளை ஏற்படுத்தும் வகையில் விஸ்தரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், பல ஆண்டுகளாக, கேட்டு, கேட்டு பெறப்பட்ட ஆஸ்பத்திரி என்று மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியை மறைமுகமாகப் பாராட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது முதலிலே இயங்கட்டும். அதற்குப் பிறகு அங்கு வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்த்து, அக நோயாளிகள்—இன் பேஷன்ட்ஸ்——எண்ணிக்கையைப் பார்த்து, 20 பெட்கள் உள்ளன. அது 100 சதவீதம் யுட்டிலைசேஷன் ஆகிறதா என்பதை யெல்லாம் பார்த்துத்தான், வெவ்வேறு பிரிவுகள் கொண்டு வர நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும். ஆகவே, பிறகு படிப்படியாக எல்லாவிதமான வசதிகளையும் கொண்டு வர முயற்சிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20–லிருந்து, 25,000 வரை மக்கள் வசிக்கும் பகுதியில், 5 ஏக்கர் இனாமாகக் கொடுக்கவும், ரூ. 1 இலட்சம் இனாமாகக் கொடுக்கவும் மக்கள் முன் வந்தால், அங்கே 20 பெட் உள்ள ஆஸ்பத்திரி கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். இது ஒரு பொதுக் கேள்வி'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கேள்வி என்றால், தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.

மதுராந்தகம் தொகுதியில் காலரா நோய்.

*வினா எண். 750—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி வையாவூர் பிர்காவில் காலரா பரவியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்கு காலராவில் 1980 ஆம் ஆண்டு இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்கள் குடும்பத்திற்கு அரசு நிவாரணம் ஏதாவது வழங்கியதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இப் பகுதி காலரா நோயினால் பாதிக்கப்படவில்லை. (ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, பாம்புத் தலை மைக் எங்களுக்கு மட்டும் ஏன் இல்லையென்று கேட்டேன். அதை எங்களுக்கும் வைத்துள்ளதற்காக, சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாம்புத் தலை மைக்கிலே எப்படியாவது பேசவேண்டுமென்பதற்காக, ஒரு கேள்வியைக் கேட்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது கேள்வி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாம்புத்தலை மைக் அல்ல. முதலிலே, நல்ல பெயரை வையுங்களேன்.

திரு. துரைமுருகன்: தண்ணீர்ப் பாம்பு தலையைத் தூக்கினால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இந்த மைக் இருக்கிறது. ஆகவேதான் பாம்புத் தலை மைக் என்று சொன்னேன்.

இந்தக் காலரா பற்றிய கேள்வி 6 மாதத்திற்கு முன்னாலே கேட்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு இறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கேட்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, இப்பொழுது குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே சமையலுக்குக்கூட தண்ணீரில்லாத நிலைமை உருவாகியிருக்கிறது. பேரூரிலே தண்ணீரே இல்லையென்று, நேற்று மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே, திரு. பலராமன் அவர்கள்கூடத் தெரிவித்தார்கள். சேற்றுத் தண்ணீரை எடுத்து மக்கள் குடிப்பதால், இன்றைக்குக் காலரா பரவி இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசிடம் ஏதாவது நடவடிக்கைக் குறிப்புகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே. அவர்கள் இரண்டு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள், அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதுபோல், அந்த மாதிரி எந்தக் காலராவும் கிடையாது. காலரா கற்பனையிலேதானிருக்கிறது. அது எனக்குத் தெரியும். Acute Gastro Entritis என்று சொல்லக்கூடிய வயிற்றுப் போக்குத்தான் இருக்கிறது. அதைச் சுருக்கமாக A.G.E. என்று சொல்வார்கள். அது 1 நாள், $\frac{1}{2}$ நாள் இருக்கும். அதைக் கூட சில நேரங்களிலே, பயந்துகொண்டு காலரா என்று நினைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, Gastro Entritis-ஐ காலரா என்று நினைக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு யோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தொழில் நுட்பப்பிரிவு ஊழியர்களுக்கான ஊக்க ஊதியம்

*வினா எண். 751 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—